மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேளிக்கை வரி மீது விதிக்கப்பட்ட கூடுதல் சர்சார்ஜ் வரி மூலம் ஜனவரித் திங்களில் கிடைத்த தொகை ரூ. 12.32 இலட்சம்.

திரு. எஸ். கணேசன்: இந்தக் கூடுதல் சர்சார்ஜ் வரிமூலம் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக இதுவரை கிடைத்திருக்கின்ற தொகை எவ்வளவு? நம்முடைய மாநிலத்தின் சார்பில், நாட்டுப் பாதுகாப்புக்கான நிதி இந்தியப் பிரதமரிடம் அளிக்கப் பட்டிருக்கிறதே, இந்த நிலையில் மேலும் இந்த வரியை நீடிக்க அரசு விரும்புகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் விடை அளிக்கும்போது சொன்னேன், ஏற்கனவே சட்டம் பிறப்பிக்கும்போது வார்த்தைகள் எச்சரிக்கையாகப் போடப்பட்டிருக்கின்றன. நாட்டுப் பாதுகாப்புக்கு என்ற வார்த்தையை நான் சேர்க்கவில்லை. தமிழக அரசினுடைய வருவாயைப் பெருக்குவதற்கும் என்று சொன்னேன். ஆகவே, இந்த வரியை இப்பொழுது நீக்குவதாக இல்லை. வருமானத்தைப் பற்றி இதுவரையில் எவ்வளவு என்ற தகவல் இல்லை. ஆனால், மார்ச் மாதம் முடிய தமிழக அரசுக்குக் கிடைத்திருக்கிற வருமானம் ரூ. 50.97 லட்சமாகும்.

திரு. எஸ். கணேசன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டதற்குப் பிறகு இந்தச் சினிமா தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த ஆண்டு மதுக்கடைகள் மிக அதிகமான அளவுக்கு ஏலம் போயிருக்கின்றன. இது மேலும் இந்தத் தொழிலை பாதிக்கும் என்பதால் இதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேளிக்கை வரி வசூலை பார்க்கும் போது, பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. சினிமாத் தொழில், நன்றாக சிறப்பாக இருப்பதாகத்தான் எனக்குக் காட்சி அளிக்கிறது.

மத்திய சிறைச்சாலைகளில் செய்யப்பட்ட மரச்சாமான்கள்

* 220 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1971-72-ம் ஆண்டில் தமிழக மத்திய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளால் செய்யப்பட்ட மரச் சாமான்களின் மதிப்பீட்டுத் தொகை சிறைச்சாலை வாரியாக எவ்வளவு?

1972 ஆகஸ்ட் 21]

(இ) அவை எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட்டன

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழக மத்திய சிறைச்சாலைகளில ஏப்ரல் 1971 முதல் பிப்ரவரி 1972 முடிய கைதிகளால் செய்யப்பட்ட மரச்சா மான்களின் மதிப்பீட்டுத்தொகை வருமாறு :

1. மத்தியச் சிறைச்சாலை, சென்னை—3,20,703 ரூபாய்.

2. மத்தியச் சிறைச்சாலை, மதுரை—2,31,227 ரூபாய்.

3. மத்தியச் சிறைச்சாலை, வேலூர்—1,68,709 ரூபாய்.

4. மத்தியச் சிறைச்சாலை, சேலம்—4,07,169 ரூபாய்.

5. மத்தியச் சிறைச்சாலை, கோவை—2,50,952 ரூபாய்.

6. மத்தியச் சிறைச்சாலை, திருச்சி—2,52,878 ரூபாய்.

7. மத்தியச் சிறைச்சாலை, கடலூர்—2,00,735 ரூபாய்.

8. மத்தியச் சிறைச்சாலை, பாளையங்கோட்டை—2,03,928 ரூபாய்.

9. இளைஞர் சிறைப்பள்ளி, புதுக்கோட்டை—7,774 ரூபாய்.

10. பிற்காப்பு இல்லம் (ஆண்கள்), சென்னை—56,831 ரூபாய்.

(இ) சிறைச்சாலைகளில் தயார் செய்யப்படும் தர அளவு நிர்ணயிக்கப் பட்ட (standard) மரச்சாமான்களில் பெரும்பாலானவை அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் தேவைக்கேற்ப செய்யப்படு கின்றன. எனினும் தனிப்பட்டோர் வேண்டுகோளின்படியும் தரஅளவு நிர்ண யிக்கப்படாத மரச்சாமான்கள் தயார் செய்து கொடுக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலைகளில் கைதிகளால் செய்யப்படுகின்ற மரச்சாமான்களை மேலும் அதிகமாகச் செய்வ தற்கு அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களிடம் வேலை வாங்கி, இன்னும் அதிக மான மரச் சாமான்களைச் செய்து, அரசாங்க உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரி கள் ஆகியவை சிக்கனமான முறையில் அவற்றைப் பயன்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே அதைத்தான் செய்து வரு கிறோம்.